செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 21 நாள்: 10/8/2020

## பத்திரிக்கைசெய்தி

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் 2020 -2021 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட "ஆத்மநிர்பார் பாரத் அபியான்" திட்டத்தின் கீழ் ஒருபகுதியாக அமைப்பு சாரா உணவு பதப்படுத்தும் சிறுநிறுவனங்களை வலுப்படுத்தும் விதமாக "பாரத பிரதமர் உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களுக்கான திட்டம்" அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2020-2021 ஆம் ஆண்டு முதல் 2021-2025 வரை 5 ஆண்டுகளுக்கு செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய அரசின் 60 சதவீதம் மற்றும் மாநில அரசின் 40 சதவீதம் நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும். இத்திட்டம் "ஒருமாவட்டத்திற்கு ஒருவிளைபொருள்" என்ற அணுகுமுறையில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டமானது, மத்தியஅமைச்சக உணவுப்பதப்படுத்தும் தொழில்துறை வழியாக, தமிழ்நாட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் செயல்படுத்தப்படும். மாவட்ட அளவில் மாவட்டஆட்சியர் அவர்களின் தலைமையின் கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

உணவுப்பதப்படுத்தும் சிறு நிறுவனங்களுக்கான இத்திட்டத்தின் மூலம் தனிநபர் அடிப்படையில், ஏற்கனவே உணவு பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு நிறுவனங்களை வலுப்படுத்துதல் அல்லது புதிய நிறுவனங்கள் தொடங்குதல், குழு அடிப்படையில் பொது உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தருதல், வர்த்தக முத்திரை மற்றும் சந்தைப்படுத்துதல், தொழில் நுட்ப பயிற்சிகள் போன்ற இனங்களுக்கு நிதி உதவி வழங்கப்படும். மேலும், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், சுய உதவி குழுக்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் போன்றவைகளுக்கும் நிதிஉதவிவழங்கப்படும்.

"ஒருமாவட்டத்திற்குஒருவிளைபொருள்" என்ற அடிப்படையில் இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு "பயறு வகைகள்" பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றும் ஈடுபட உள்ள சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் ஒரு சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனம், தகுதியான திட்ட மதிப்பீட்டில் 35 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ10 இலட்சம் வரை நிதி உதவி பெற்று பயன்பெற வாய்ப்புள்ளது. வர்த்தகமுத்திரை மற்றும் சந்தைப்படுத்துதலுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். மேலும், சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு தேவைப்படும் தொழில் கடன் தொகை, வங்கிமூலம் ஏற்பாடு செய்து தரப்படும்.

Scanned with CamScanner

ஆகவே, இராணிப்பேட்டை மாவட்டத்தில் "பயறு வகைகள்" பதப்படுத்தும் தொழிலில் ஏற்கனவே ஈடுபட்டுள்ள மற்றும் புதியதாக ஈடுபட உள்ள நிறுவனங்கள், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சலுகைகளை பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு இராணிப்பேட்டைமாவட்ட வேளாண்மைதுணைஇயக்குநர் (வேளாண் வணிகம்) மற்றும் வேளாண்மைஅலுவலர் (செல் எண் 7598102824) அவர்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்டஆட்சியர்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

/உண்மைநகல்/

10.8.2020
செ.ம.தொ.அ.
இராணிப்பேட்டை - 1.

7/8/2020
PERSONAL ASSISTANT (AGRI)
TO COLLECTOR
DEPUTY DIRECTOR OF AGRICULTURE
RANIPET.

Scanned with CamScanner